# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 47 | 4 Pages | 17.09.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 47 | 4 பக்கங்கள் | 17.09.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## உள்துறை மந்திரி அமித்ஷாவுடன் பி.வி.சிந்து சந்திப்பு



ஐதராபாத், செப். 17

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தெலுங்கானாவில் பயணம் மேற்கொண்டுள்ளார். பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து ஐதராபாத்தில் உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்தார்.

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தெலுங்கானா மாநிலத்தில் இன்று பயணம் மேற்கொண்டுள்ளார். இந்நிலையில், ஐதராபாத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை பேட்மிண்டன் வீராங்கனை பிவி சிந்து இன்று மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இதுதொடர்பாக, அமித்ஷா வெளியிட்டுள்ளடுவிட்டர்செய்தியில்,பிரபலபேட்மிண்டன்வீராங்கனை பி.வி.சிந்துவை ஐதராபாத்தில் இன்று சந்தித்தேன். விளையாட்டுத் திறமைக்காகஅவர்பெற்றுள்ளசர்வதேசஅங்கீகாரத்தில்தேசம்பெருமிதம் கொள்கிறது. அவரது அர்ப்பணிப்பு, கடின உழைப்பு ஆகியவை இளைய தலைமுறையினருக்கு உத்வேகம் அளிக்கிறது என பதிவிட்டுள்ளார்.

## ஜிம்மில் அதிர்ச்சி.. திரெட்மில்லில் ஓடிக்கொண்டிருந்த இளைஞர் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழப்பு




உத்தரப் பிரதேசம், செப். 17

ஜிம்மில் உடல் பயிற்சி செய்துக் கொண்டிருந்த மற்ற நபர்கள் சித்தார்த்துக்கு முதலுதவி செய்தனர். சிசிடிவி வீடியோ சமூக வலைத்தளங்களில்வைரலாகி"ஃபிட்னஸ்ஃப்ரீக்"குகளைஅதிர்ச்சியடைய வைத்துள்ளது.

உத்தரப்பிரதேசம்மாநிலம்காசியாபாத்நகரில்உள்ளசரஸ்வதிவிஹாரில் இயங்கி வரும் ஜிம் ஒன்றில் ஒருவர் திரெட்மில்லில் ஓடிக் கொண்டிருந்தபோது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஜிம்மில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி காட்சியின்படி,காஜியாபாத்தை சேர்ந்த சித்தார்த் என்ற நபர் ஜிம்மில் உடற் பயிற்ச்சி செய்துக் கொண்டிருந்தார்.திரெட்மில்லில் சித்தார்த் ஓடிக் கொண்டிருந்தபோது திடீரென நின்று மெதுவாக சுயநினைவை இழந்து திரெட்மில் அருகே சரிந்து விழுவது போன்ற காட்சி பதிவாகியுள்ளது. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த ஜிம்மில் உடல் பயிற்சி செய்துக் கொண்டிருந்த மற்ற நபர்கள் சித்தார்த்துக்கு முதலுதவி செய்தனர். பின்னர், மருத்துவமனைக்குதூக்கிசென்றபோதுஅவர்ஏற்கனவேஇறந்துவிட்டதை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தின் சிசிடிவி வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி "ஃபிட்னஸ் ஃப்ரீக்"குகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

## சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ குவான் யூவின் 100வது பிறந்தநாள்: பிரதமர் மோடி மரியாதை



சிங்கப்பூர், செப். 17

பிறந்தநாளைமுன்னிட்டுபிரதமர்நரேந்திரமோடிதனதுஎக்ஸ்பக்கத்தில் மரியாதை செலுத்தியுள்ளார். சிங்கப்பூர் மாற்றத்தில் அவரது தொலைநோக்கு தலைமை முக்கியப் பங்காற்றியது.

நவீன சிங்கப்பூரின் நிறுவனர் என்று பரவலாகப் போற்றப்படும் லீ குவான் யூவின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் பக்கத்தில் மரியாதை செலுத்தியுள்ளார். "லீ குவான் யூவின் 100வதுபிறந்தநாளின்சிறப்புசந்தர்ப்பத்தில்அவருக்குஎனதுமரியாதைகள்" என்று எக்ஸ்ல் பிரதமர் மோடி கூறினார். இதுகுறித்து பிரதமர் மோடி மேலும்குறிப்பிடுகையில்,"சிங்கப்பூர்மாற்றத்தில்அவரதுதொலைநோக்கு தலைமை முக்கியப் பங்காற்றியது. அவரது தொலைநோக்கு பார்வையும், இடைவிடாத நாட்டமும் அவரது தனிப்பட்ட மகத்துவத்திற்குச் சான்றாகும். அவரது பணி உலகம் முழுவதும் உள்ள தலைவர்களை ஊக்குவிக்கிறது," என்று அவர் கூறினார்.

# "மக்களுடன் ஸ்டாலின்" என்ற செயலியை இன்று வெளியிடுகிறார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, செப். 17

சென்னையில் இருந்து இன்று ரெயில் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காட்பாடி விரைந் தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றுகிறார்.

வேலூரில் இன்று தி.மு.க பவள விழாவுடன் கூடிய முப்பெரும் விழா நடைபெற உள்ளது. இந்த விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கட்சியின் பொதுச் செயலாளர்அமைச்சர்துரைமுருகன், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற் றும் கட்சி நிர்வாகிகள் அமைச்சர் கள், எம்.எல். ஏ.க்கள் கலந்து கொள் கின்றனர். இதனால் ஆயிரக்கணக்கா னோர் விழாவில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற் காக வேலூர் அடுத்த கந்தனேரியில்




சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை அருகே பிரம்மாண்ட கோட்டை வடிவிலான மேடை பந் தல் அமைக்கப்பட்டுள்ளது. விழா வில் பங்கேற்பதற்காக சென்னை யில் இருந்து இன்று ரெயில் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காட் பாடி விரைந்தார். ரெயில் நிலையத் தில் அவருக்கு பிரம்மாண்ட வர வேற்பு அளிக்கப்பட்டது.

முதலமைச்சர் இன்று இரவு வேலூர் அரசு சுற்றுலா மாளிகை அல்லது தனியார் ஓட்டலில் தங்குகிறார். நாளை காலை முதல் பட்டிமன்றம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடக்கிறது. மாலையில் பிரமாண்ட பொதுக்கூட் டம் நடைபெறுகிறது. இதில் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றுகி றார். இந்நிலையில், நாளை வேலூ ரில் நடைபெறும் முப்பெரும் விழா வில் மக்களுடன் ஸ்டாலின் என்ற செயலியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார். முதலமைச்சரின் கள செயல்பாடு களை அறிந்துகொள்ளும் வகையி லும், எல்லாருக்கும் எல்லாமும் கிடைத்தாக வேண்டும் என்ற நோக் கிலும் இச்செயலி வடிவமைக்கப் பட்டுள்ளது.

# விநாயகர் சதுர்த்தி விழா போலீசார் அதிரடி உத்தரவு

திருப்பூர், செப். 17

விநாயகர் சதுர்த்தி விழா தொடர் பாக இந்து அமைப்பினருடன் ஆலோசனைக்கூட்டம் அவிநாசி யில் நடைபெற்றது.கூட்டத்துக்கு அவிநாசி காவல் துணைக் கண்கா ணிப்பாளர் பவுல்ராஜ் தலைமை வகித்தார்.ஆய்வாளர்கள்ராஜவேல், வசந்தகுமார், அம்பிகா, சக்திவேல், சக்திவேல், தினகரன், காவல் உதவி ஆய்வாளர் சேகர் ஆகியோர் முன் னிலை வகித்தனர். விநாயகர் சதுர்த்தி விழாவில் கடந்த ஆண்டு பிரதிஷ்டை செய்த இடங்களை தவிரவேறுஇடங்களில்சிலைகளை பிரதிஷ்டை செய்யக்கூடாது. அனு மதி பெற்று விளம்பர பதாகைகள், ஒலிபெருக்கி வைக்க வேண்டும். காலை, மாலை என 2 மணி நேரம் அனுமதித்த சப்தத்துடன் உபயோ கிக்க வேண்டும். சிலைகளை பிர திஷ்டை செய்யும்போதும், ஊர்வலம் செல்லும் போதும் வாண வேடிக்கை, பட்டாசுகள் உபயோ கிக்கக்கூடாது. களிமண், காகிதக் கூழ் ஆகியவை கொண்டு தயாரித்த சிலைகளையே அமைக்க வேண் டும். சிலைக்கு 5 பேர் 24 மணி நேர மும் பாதுகாப்பாக இருக்க வேண் டும் என்பன உள்ளிட்ட விதிமுறைகளை பின்பற்ற வேண் டும் என கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. மேலும், சிலை வைக்கும் இடத்தின் உரிமையாளர், காவல் துறை, தீயணைப்புத்துறை, மின்சார வாரியத்தினரிடம் தடையின்மைச் சான்று பெறுதல், சார்ஆட்சியரிடம் உரிய படிவத்தில் விண்ணப்பித்து அனுமதி பெறுதல், ஊர்வல ஒருங்கி ணைப்பாளர்கள், ஊர்வலம் அமை தியான முறையில் நடைபெற கடைப்பிடிக்க வேண்டிய நடைமு றைகள் உள்ளிட்ட விதிமுறைகள் அறிவுறுத்தப்பட்டன.இந்த கூட்டத் தில், இந்து முன்னணியினர் உள் ளிட்ட பல்வேறு இந்து அமைப்பி னர், காவல் துறையினர் பங்கேற்றனர்.

# பி.ஏ.பி.,வெள்ளக்கோவில் கால்வாய் நீர் பாதுகாப்பு சங்க விவசாயிகள் 22ந்தேதி பட்டினி போராட்டம்

திருப்பூர், செப். 17

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனக்கால்வாய் நீர் நிர்வாகத்தை சீரமைக்க வலியுறுத்தி 22ந்தேதி தொடர் பட்டினி போராட்டம் நடத்தப்படுகிறது. இதற்கு ஆதரவு திரட்டும் வகையில் வெள்ளக்கோவில் பகுதியில் சேனாப திபாளையம், வேலப்பநாயக்கன்வலசு, கல்லமடை, இலுப்பைக்கிணறு, அய்யனூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சங்கத்தலைவர் வேலுச்சாமி தலைமையில் பொதுமக்களை சந்தித்து ஆதரவு திரட்டப்பட்டது. அப் போது சங்க நிர்வாகிகள் கூறியதாவது: மற்ற பகுதிகளில் உள்ளதை போல வெள்ளக்கோவில் பகுதி பி.ஏ.பி., கால்வாய்களிலும் சமச்சீர் பாசனத்தை அமல்படுத்த வேண்டும். கால்வாய்களில் நீர் மாசுபாடு, நீர்திருட்டை தடுக்க வேண்டும். கால்வாய் சீரமைப்புப் பணிகளை நீண்டகால அடிப்படையில் தரமானதாக செய்ய வேண்டும். பி.ஏ.பி., நீர் பாசன விதிமுறைகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்பின்படி எங்களுக்கு உரிய தண்ணீரை வழங்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு 22ந்தேதி பகவதிபாளையம் சங்க வளாகத்தில் விவசாயிகள் பங்கேற்கும் தொடர் பட்டினி போராட்டம் நடைபெற உள்ளது என்றனர்.

# திருட்டு சம்பவங்களால் பொதுமக்கள் அச்சம் கோவில்வழி பகுதியில் போலீசார் ரோந்து தீவிரப்படுத்தப்படுமா?

திருப்பூர், செப் .17

திருப்பூர் மாநகரின் 60வது வார்டு கோவில்வழி. தென் மாவட்டங்கள் செல்வதற்கான பேருந்து நிலையம் இங்கு விரிவாக்கம் செய்யப்பட்டு, ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கட்டப் பட்டு வருவதால் பொதுமக்கள் பல ரும் இந்த பகுதியில் குடியேறி வரு கின்றனர். இப்பகுதியில் அடிக்கடி தொடர் திருட்டு சம்பவங்கள் அரங் கேறி வருவதால், பொதுமக்கள் அச் சத்தில் உள்ளதாக புகார் எழுந்துள் ளது. இது தொடர்பாக அப்பகுதியை சேர்ந்தவரும், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க பொறுப்பாளரு மான பரமசிவம் கூறியதாவது: கோவில்வழி பகுதியை சுற்றியுள்ள முத்தணம்பாளையம், பிள்ளையார் நகர் மேற்கு, சேரன் நகர் ஆகிய 3 பகுதிகளில் நூற்றுக்கணக்கான குடி யிருப்புகள் உள்ளன. இந்த பகுதிக ளில் சமீபகாலமாக திருட்டு மற்றும் வழிப்பறி சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சேரன் நகர் 2வது வீதி யில் ஈஸ்வரன் ராணி தம்பதி வீட்டில் 8 பவுன்நகைகள்திருட்டு,சண்முகம் சண்முகப் பிரியா தம்பதி வீட்டில் கடந்த அக்டோபர் மாதம் 8 பவுன் நகை, ரூ. 50 ஆயிரம் திருட்டு, நடை பெற்றது, இதனை தொடர்ந்து ஜெய ராஜ் மாலதி தம்பதி வீட்டில் கடந்த ஆண்டு இறுதியில் 3 பவுன் தங்க நகை, வெள்ளி, ரொக்கம் திருட்டு என இப்பகுதிகளில் அரங்கேறிய திருட்டு சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த வழக்கு தொடர்பாக நல்லூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து, பல மாதங்களாகியும் இதுவரை எந்த வழக்கிலும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. நடுத்தர குடும்பத்தினர் சிறுக சிறுக சேமித்து, நகையை வாங்கி வீட்டில் வைத் தால், அவற்றுக்கும் பாதுகாப்பற்ற சூழலே நிலவுகிறது. மாநகர போலீ சார் தொடர்ந்து எங்கள் பகுதியில் இரவு மற்றும் பகல் நேரங்களில் ரோந்துப் பணியை தீவிரப்படுத்தினால் மட்டுமே திருட்டு சம்பவங்களை தடுக்க முடி யும். எங்கள் பகுதியில் போதிய தெருவிளக்குகளும் இல்லாததால், குற்றச்செயல்கள் அரங்கேற ஏது வாக அமைந்து விடுகிறது. பொது மக்களின் தேவை கருதி போதிய தெருவிளக்கு வசதி செய்து தர வேண்டும் என கூறியுள்ளார். இது தொடர்பாக, திருப்பூர் மாநகர காவல் ஆணையர் பிரவீன் குமார் அபிநபுவிடம் கேட்டபோது, கோவில் வழியில் போதிய சிசி டிவி., கேமராக்கள் இல்லாததால், திருட்டு சம்பவங்களில் ஈடுபடுப வர்களை பிடிக்க முடியாத நிலை உள்ளது. அந்த பகுதியில் சிசிடிவி., கேமராக்கள் அமைக்க குடியிருப்பு வாசிகளிடம் பேசி வருகிறோம்" என்றார்.

# சுங்குவார்சத்திரம் அருகே 1 டன் ரேஷன் அரிசி சிக்கியது

சுங்குவார்சத்திரம், செப். 17

மகாராஜன் வீட்டில் ஆய்வு செய் தனர். பதுக்கி வைத்திருந்த ஒரு டன் 80 கிலோ ரேஷன் அரிசி மூட் டைகளை பறிமுதல் செய்த னர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஶ்ரீபெ ரும்புதூர்அடுத்தசுங்குவார்சத்திரம் அருகே சந்தவேலூர் ஈ.பி.காலணி அம்பேத்கர் தெருவை சேர்ந்தவர் மகாராஜன் வயது (40). இவர் பொதுமக்களிடம் இருந்து இலவச ரேஷன் அரிசியை குறைந்த விலைக்கு வாங்கி தன் வீட்டில் பதுக்கி வைத்து வடமாநில தொழி லாளர்களுக்கு அதிக விலைக்கு விற்பதாக ஸ்ரீபெரும்புதூர் குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் குடிமை பொருள் இன்ஸ்பெக்டர் தாம்சன் சேவியர் தலைமையில் அதிகாரிகள் ஈ.பி. காலணி பகுதியில் உள்ள மகாரா ஜன் வீட்டில் ஆய்வு செய்தனர். போலீசார் நடத்திய ஆய்வின் போது அவரது வீட்டில் சுமார் 40 கிலோ எடை கொண்ட 20 மூட் டைகளும், 20 கிலோ எடை கொண்ட 14 மூட்டைகளும் என மொத்தம் 1080 கிலோ ரேஷன் அரிசி பதுக்கி வைத்திருந்தது தெரி யவந்தது.

இதையடுத்து சட்டத்திற்கு புறம் பாக ரேஷன் அரிசியை பதுக்கி விற் பனை செய்து வந்த மகாராஜனை போலீசார் கைது செய்து பதுக்கி வைத்திருந்த ஒரு டன் 80 கிலோ ரேஷன் அரிசி மூட்டைகளை பறி முதல் செய்தனர்.

# விநாயகர் சதுர்த்தி விடுமுறை சிறப்பு பஸ்கள் இயக்கம்

**திருப்பூர்,செப்.17**

சிறப்பு பஸ்கள் பல்வேறு பகுதிகளுக்கு இயக்கப்படும் என போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது. கூட்ட நெரிசலுக்கு ஏற்ப நாள் முழுதும் பஸ் இயக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை மற்றும் விநாயகர் சதுர்த்தி தொடர் விடுமுறையை முன்னிட்டு திருப்பூரில் இருந்து 90 சிறப்பு பஸ்கள் பல்வேறு பகுதிகளுக்கு இயக்கப்படும் என போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது. நாளை முகூர்த்த தினம், 18ந்தேதி விநாயகர் சதுர்த்தி அரசு விடுமுறை என்பதால், வெளியூர் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும். பயணிகள் வசதிக்காக திருப்பூர் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சேலம், திருவண்ணாமலைக்கு 20 பஸ்கள், கோவில்வழி பஸ் நிலையத்தில் இருந்து மதுரை, தேனி, நாகர்கோவில், திருநெல்வேலி, திருச்செந்தூர் மற்றும் செங்கோட்டைக்கு 50 பஸ்கள், திருப்பூர் புதிய பஸ் நிலையத்தில் இருந்து, தஞ்சாவூர், திருச்சி, கும்பகோணம், திருவாரூர், நாகை, வேளாங்கன்னி உள்ளிட்ட பகுதிகளுக்கு 20 சிறப்பு பஸ்கள் என மொத்தம் 90 பஸ்கள் இயக்கப்பட உள்ளது.




இது குறித்து திருப்பூர் போக்குவரத்து துறை அதிகாரிகள் கூறியதாவது: கூட்ட நெரிசலுக்கு ஏற்ப நாள் முழுதும் பஸ் இயக்கப்படும். வெளியூர் சென்றவர் திரும்ப ஏதுவாக திங்கள்கிழமை இரவு சிறப்பு பஸ் இயங்கும். அனைவருக்கும் ஒரே நேரத்தில் பயணிக்க திட்டமிடாமல், முன்கூட்டியே பஸ் நிலையத்திற்கு வந்து, பஸ்களின் தங்களுக்கான இருக்கையை உறுதி செய்து கொள்வது நல்லது.

சிறப்பு பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலித்தால், பயணிகள் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சுக்கம்பாளையத்தில் கிளை நூலகம் மீண்டும் செயல்பட கோரிக்கை

**பல்லடம்,செப்.17**

கடந்த சில வருடங்களாக கிளை நூலகம் திறக்கப்படுவதில்லை. கிளை நூலகம் இல்லாமல் மாணவர்கள், இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுக்கம்பாளையம் பகுதி கிராம மக்கள் திருப்பூர் மாவட்ட நூலக அலுவலருக்கு அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது :பல்லடம் வட்டாரம் சுக்கம்பாளையம் கிராம ஊராட்சியில் பகுதி நேர கிளை நூலகம் இயங்கி வந்தது. அந்த நூலகத்தில் மாணவர்கள், இளைஞர்கள் சென்று பல்வேறு நூல்களைப் படித்து அறிவுத்திறனை வளர்த்து வந்தனர். இந்த நிலையில் கடந்த சில வருடங்களாக கிளைநூலகம்திறக்கப்படுவதில்லை. தற்போது கிராம நிர்வாக அலுவலர் அலுவலமாக செயல்பட்டு வருகிறது. கிளை நூலகம் இல்லாமல் மாணவர்கள், இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, செயல்படாமல் உள்ள கிளை நூலகத்தை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம் .இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# பல்லடம் அருகே குடிநீர் பற்றாக்குறையால் பொதுமக்கள் அவதி

**பல்லடம்,செப்.17**

கோட்டப்பாளையம் பகுதியில் 15 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. இங்கு வசிக்கும் பொதுமக்கள் குடிநீரை பணம் கொடுத்து வாங்கி வருகின்றனர். பல்லடம் அருகே உள்ள வாவிபாளையம் கிராம ஊராட்சிக்கு உட்பட்ட கோட்டப்பாளையம் கிராம பகுதிகளில் முறையாக குடிநீர் வினியோகம் செய்யாததால் கடந்த ஒரு மாத காலமாக குடிநீர் கிடைக்காமல் பொதுமக்கள் கடும் அவதிப்படுவதாகவும் இது குறித்து புகார் தெரிவித்தும் ஊராட்சி நிர்வாகம் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியமாக உள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து கோட்டபாளையத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கூறியதாவது: கோட்டப்பாளையம் பகுதியில் 15 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. அதிலும் மிகக் குறைந்த அளவே விநியோகம் செய்யப்படுகிறது. இந்த நிலையில் கடந்த 1 மாதமாக குடிநீர் வினியோகம் செய்யப்படவில்லை. இங்கு வசிக்கும் பொதுமக்கள் குடிநீரை பணம் கொடுத்து வாங்கி வருகிறோம். மேலும் இங்குள்ள கிணறுகளில் சப்பைத் தண்ணீர் உள்ளது. அதனை எடுக்க சுமார் 5 கிலோ மீட்டர் இருசக்கர வாகனத்தில் சென்று தண்ணீர் எடுத்து வருகிறோம். இதுகுறித்து பலமுறை ஊராட்சி நிர்வாகத்திடம் புகார் அளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து குடிநீர் இல்லாமல் தவிக்கும் எங்களுக்கு முறையாக குடிநீர் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் .

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



# வெள்ளகோவிலில் 16 இடங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபாடு

**வெள்ளகோவில்,செப்.17**

இந்து முன்னணி சார்பில் விநாயகர் சிலை வைத்து வழிபாடு செயஙயபட உள்ளது.

செவ்வாய்க்கிழமையன்று மாலை கடைவீதி வழியாக ஊர்வலமாக எடுத்து செல்லப்பட உள்ளது.

வெள்ளகோவில் பகுதியில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு இந்து முன்னணி சார்பில் புதிய பஸ் நிலையம், திருவள்ளுவர் நகர், கல்லாங்காடுவலசு, குமாரவலசு, லைப்ரரி, உப்பு பாளையம், புதுக்காடு, சிவநாதபுரம், ஏபி புதூர், சீரங்க ராய கவுண்டன் வலசு, ஓலப்பாளையம் அருகே உள்ள அனுமந்தபுரம், முத்தூர், எல் கே சி நகர் தண்ணீர் டேங், நடேசன் நகர், பழனிசாமி நகர், மணியக்காரன்பேட்டை, ஆகிய 16இடங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபாடு நடத்தப்படுகிறது. பிறகு செவ்வாய்க்கிழமையன்று மாலை வீர குமாரசாமிதிருக்கோவில் வளாகத்திலிருந்து கடை வீதி வழியாக ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு கொடுமுடி ஆற்றில் கொண்டு சென்று கரைக்க போவதாக இந்து முன்னணி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.



# திருப்பூர் தெற்கு தாசில்தார் அலுவலகத்தில் 319 இருசக்கர வாகனங்கள் ஏலம்

**திருப்பூர்,செப்.17**

தங்கள் ஆதார் அட்டையுடன் வைப்புத்தொகையாக ரூ.3 ஆயிரத்தை செலுத்த வேண்டும். வாகனங்களை ஏலம் எடுக்க விரும்புபவர்கள்திருப்பூர் தெற்கு போலீஸ் இன்ஸ்பெக்டரை தொடர்பு கொள்ளலாம். திருப்பூர் தெற்கு போலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் உரிமை கோரப்படாத 319 இருசக்கர வாகனங்கள் வருகிற 26ந் தேதி காலை 11மணிக்கு தெற்கு தாசில்தார் அலுவலகத்தில் தாசில்தார் முன்னிலையில் பொது ஏலம் விடப்ப டுகிறது.



வாகனங்களை ஏலத்தில் எடுக்கும் நபர்கள் வாகனத்தின் ஏலத்தொகையில் இருந்து 18 சதவீதம் சரக்கு மற்றும் சேவை வரி செலுத்த வேண்டும்.

விருப்பமு ள்ளவர்கள் தங்கள் ஆதார் அட்டையுடன் வைப்புத்தொகையாக ரூ.3 ஆயிரத்தை திருப்பூர் தெற்கு தாசில்தார் அலுவலகத்தில் வருகிற 25ந் தேதி காலை 11 மணி முதல் மதியம் 2 மணி வரை செலுத்த வேண்டும்.

வாகனங்களை ஏலம் எடுக்க விரும்புபவர்கள் திருப்பூர் தெற்கு போலீஸ் இன்ஸ்பெக்டரை தொடர்பு கொண்டு ஏலத்தில் விடப்படும் வாகனங்களை பார்வையிடலாம். இந்த தகவலை திருப்பூர் தெற்கு தாசில்தார் கவுரிசங்கர் தெரிவித்துள்ளார்.

# பேரிடர் காலத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் மாணவர்களுக்கு தீயணைப்பு துறையினர் பயிற்சி

**திருப்பூர்,செப்.17**

நாட்டு நலப்பணித் திட்டம் அலகு2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரி வளாகத்தில் உள்ள மைதானத்தில் தீயணைப்பு துறை சார்பில் செயல்முறை விளக்கம் நடைபெற்றது.

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2 சார்பாக கல்லூரி வளாகத்தில் உள்ள மைதானத்தில் தீயணைப்பு துறை சார்பில் செயல்முறை விளக்கம் நடைபெற்றது. நாட்டு நலப்பணித் திட்டம் அலகு2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார்.

கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக மாவட்ட தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் வீரராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பிறகு, தீயணைப்பு பணியாளர்களால் வெள்ள அபாய பேரிடர் காலங்களில் எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது, தீப்பற்றிய இடத்தில் இருந்து மக்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும், பேரிடர் காலங்களில் எப்படி தப்பித்துக் கொள்வது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி செயல்விளக்கம் அளித்தனர். மேலும் காட்டு தீயை எவ்வாறு அணைக்க வேண்டும், அபாய வெள்ள பேரிடர் காலத்தில் எவ்வாறு தத்துரூபமாக காப்பாற்ற வேண்டும் என்று செயல்முறை விளக்கமாக பயிற்சியளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் தீயணைப்பு மாவட்ட அலுவலர், திருப்பூர் தீயணைப்பு நிலைய அலுவலர் மோகன், திருப்பூர் மாவட்ட தீயணைப்பு பணியாளர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். மாணவச் செயலர்கள் சுந்தரம், ராஜபிரபு, மதுகார்த்திக், சேர்லின், தினேஷ்கண்ணன், சபரிவாசன் ஆகியோர் தலைமையில் நாட்டு நலப்பணித் திட்டம் அலகு2 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



# பி.ஏ.பி.,4ம் மண்டல பாசனத்திற்காக திருமூர்த்தி அணையில் நீர் சேகரிப்பு

**உடுமலை,செப்.17**

திருப்பூர் மாவட்டத்தில் 3.77 லட்சம் ஏக்கர் நிலங்கள்பாசனவசதி பெற்றுவருகின்றன. அணைக்கு காண்டூர் கால்வாய் வழியாக வினாடிக்கு 821 கனஅடி நீர்வரத்து இருந்தது. குடிநீர், இழப்பு என 25 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டிருந்தது.

திருப்பூர் மாவட்டத்தில் 3.77 லட்சம் ஏக்கர் நிலங்கள்பாசனவசதி பெற்றுவருகின்றன. பி.ஏ.பி., பாசனத் திட்டத்தின் கீழ், கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 3.77 லட்சம் ஏக்கர் நிலங்கள்பாசனவசதி பெற்றுவருகின்றன. பாசன நிலங்கள் நான்கு மண்டலங்களாக பிரித்து நீர் வழங்கப்படுகிறது.விடுபட்ட பகுதிகளில் காண்டூர் கால்வாய், பிரதானகால்வாய்புதுப்பிக்கும் பணி மற்றும் பருவ மழைகள் ஏமாற்றியது உள்ளிட்ட காரணங்களினால் நான்காம் மண்டல பாசனத்திற்கு நீர் திறப்பது தாமதமாகியுள்ளது. இந்நிலையில் 4ம் மண்டல பாசனத்திற்குட்பட்ட 94 ஆயிரத்து 68 ஏக்கர் நிலங்களுக்கு நீர் திறக்க திட்டமிடப்பட்டது. திட்ட தொகுப்பு அணைகளில் நீர் இருப்பு குறைவாக உள்ளதால் ஒரு சுற்று நீர் வழங்க அதிகாரிகள், திட்ட குழு ஆலோசனைக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நான்காம் மண்டல பாசனத்திற்கு நீர் திறக்கும் வகையில் திட்ட தொகுப்பு அணைகளிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு நீர் திறக்கப்பட்டது. இதனால் அணை நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. திருமூர்த்தி அணையில் மொத்தமுள்ள 60 அடியில் 44.82 அடியாகவும், மொத்த கொள்ளளவான 1,935.25 மில்லியன் கனஅடியில் 1,322.93 மில்லியன் கனஅடி நீர்இருப்பு இருந்தது.அணைக்கு காண்டூர் கால்வாய் வழியாக வினாடிக்கு 821 கனஅடி நீர் வரத்து இருந்தது. குடிநீர், இழப்பு என 25 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டிருந்தது. அதிகாரிகள் கூறுகையில், நான்காம் மண்டல பாசனத்திற்கு நீர் திறக்கும் வகையில் திருமூர்த்தி அணையில் நீர் சேகரிக்கும் பணி நடந்து வருகிறது. வருகிற 20ந்தேதி, நீர்மட்டம் 54 அடி வரை உயர வாய்ப்புள்ளது. ஒரு சுற்றுக்கு, 1,900 மில்லியன் கனஅடி நீர் வழங்கப்படும். பருவ மழை, அணைகள் நீர் இருப்பை பொருத்து கூடுதல் சுற்றுக்கள் நீர் வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என்றனர்.



# அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிதிலமடைந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த உத்தரவு

**வெள்ளக்கோவில்,செப்.17**

30 படுக்கைகள், அறுவை சிகிச்சை மையத்துடன் செயல்பட்டு வந்த 1989 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழமையான கட்டடம் உள்ளது. நூற்றுக்கணக்கானோர் காத்திருக்கும் சமயத்தில் ஏதாவது அசம்பாவிதம்ஏற்படும்வாய்ப்பு உள்ளது வெள்ளக்கோவில் தாராபுரம் சாலையில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த வளாகத்தில் 30 படுக்கைகள், அறுவை சிகிச்சை மையத்துடன் செயல்பட்டு வந்த 1989 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழமையான கட்டடம் உள்ளது. இது மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் இருந்ததால் கடந்த 7 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் உள்ளது. இதன் அருகில் தற்போது வெளி நோயாளிகள் பிரிவு செயல்பட்டு வருகிறது. நூற்றுக்கணக்கானோர் காத்திருக்கும் சமயத்தில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே சிதிலமடைந்த கட்டடத்தை இடித்து தருமாறு கடந்த 11 மாதங்களுக்கு முன்பு சுகாதார நிலையம் சார்பில் பொதுப்பணித்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் நடவடிக்கை இல்லை. இது குறித்து கடந்த 2 வாரங்களுக்கு முன்பு பத்திரிகைகளில் செய்தி வெளியானது. இதைத் தொடர்ந்து தாராபுரம் கோட்டாட்சியர் செந்தில் அரசன் உத்தரவின்பேரில்,பொதுப்பணித் துறை (கட்டடங்கள்) உதவிப் பொறியாளர் ராமராஜ் ஆய்வு செய்து அந்த கட்டடத்தை இடித்து அப்புறப் படுத்த உத்தரவிட்டுள்ளார்.

# திருப்பூரில் நூல் விலை கிலோவுக்கு மேலும் ரூ.5 உயர்வு ஆடை உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி

**திருப்பூர்,செப்.17**

2வது முறையாக இன்று நூற்பாலைகள் நூல் விலையை அறிவித்தன. இதில் நூல் விலை கிலோவுக்கு மேலும் ரூ. 5 உயர்ந்தது.நூல்விலைதொடர்ந்து உயர்ந்து வருவது ஆடை உற்பத்தியாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

திருப்பூர் பின்னலாடை தயாரிப்புக்கு மிக முக்கிய மூலப்பொருளாக நூல் இருந்து வருகிறது. நூல் விலையை பொறுத்து ஆடைகளின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தொழில்துறையினர் சற்றும் எதிர்பார்க்காத வகையில், நூல் விலையை நூற்பாலைகள் மாதத்திற்கு இருமுறை அறிவிப்பதாக தெரிவித்துள்ளனர். அதன்படி செப்டம்பர் மாதம் 1ந்தேதி நூற்பாலைகள் நூல் விலையை அறிவித்தனர்.



இதில் 10 முதல் 30வது கோம்டு வரை உள்ள நூல்கள் கிலோவுக்கு ரூ.7ம், 34வது கோம்டு மற்றும் அதற்கு மேல் கிலோ ரூ.5ம் உயர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் மாதத்தில் 2வது முறையாக இன்று நூற்பாலைகள் நூல் விலையை அறிவித்தன. இதில் நூல் விலை கிலோவுக்கு மேலும் ரூ. 5 உயர்ந்தது. அதன்படி தற்போது ஒரு கிலோவுக்கு 10வது நம்பர் கோம்டு நூல் விலை ரூ.187க்கும், 16ம் நம்பர் ரூ.197க்கும், 20வது நம்பர் ரூ.255க்கும், 24வது நம்பர் ரூ.267க்கும், 30வது நம்பர் ரூ.277க்கும், 34வது நம்பர் ரூ.290க்கும், 40வது நம்பர் ரூ.310க்கும், 20வது நம்பர் செமி கோம்டு நூல் ரூ.247க்கும், 24வது நம்பர் ரூ.257க்கும், 30வது நம்பர் ரூ.267க்கும், 34வது நம்பர் ரூ.280க்கும், 40வது நம்பர் ரூ.300க்கும் விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிட த்தக்கது.நூல்விலைதொடர்ந்து உயர்ந்து வருவது ஆடை உற்பத்தியாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# துணை தாசில்தாராக 7 பேருக்கு பதவி உயர்வு

**திருப்பூர்,செப்.17**

வருவாய் ஆய்வாளர்கள் பதவி உயர்வு பெற்று 7 பேர் துணை தாசில்தாராக நியமிக்கப்பட்டுள்ளனர். நுகர்வோர் பாதுகாப்பு அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளராக இருந்த சிவக்குமார் சாலை மேம்பாட்டு திட்ட தனிதாசில்தார் அலுவலக துணை தாசில்தாராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். திருப்பூர் மாவட்ட வருவாய்த்துறையில் முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் பதவி உயர்வு பெற்று 7 பேர் துணை தாசில்தாராக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி காங்கயம் தாசில்தார் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளராக இருந்த ஈஸ்வரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக தலைமை உதவியாளராகவும், மாவட்ட கலெக்டர் அலுவலக ஈ பிரிவு முதுநிலை வருவாய் ஆய்வாளராக இருந்த பால விக்னேஷ் திருப்பூர் வடக்கு தாசில்தார் அலுவலக தலைமையிடத்துக்கு துணை தாசில்தாராகவும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளராக இருந்த சிவக்குமார் சாலை மேம்பாட்டு திட்ட தனிதாசில்தார் அலுவலக துணை தாசில்தாராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுபோல் அவினாசி மண்டல துணை தாசில்தாராக இருந்த சாந்தி மீண்டும் அதே இடத்திலும், திருப்பூர் மாநகராட்சி அலுவலக தேர்தல் துணை தாசில்தாராக இருந்த வசந்தா மீண்டும் அதே இடத்திலும், மடத்துக்குளம் தேர்தல் துணைதாசில்தாராகஇருந்த வளர்மதி மீண்டும் அதே இடத்திலும், தாராபுரம் மண்டல துணை துணை தாசில்தாராக இருந்த மகேஸ்வரி மீண்டும் அதே இடத்திலும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் பிறப்பித்துள்ளார்.

# இந்தியாவிலேயே முதல் முறையாக உழைக்கும் பெண்களுக்கு கிடைத்த அங்கீகாரம்




விருதுநகர், செப். 17

இந்தியாவிலேயே முதல் முறையாக உழைக்கும் பெண்களுக்கு கிடைத்த அங்கீகாரம் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார். அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் திட்டத்தினை தொடங்கி வைத்தனர்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை, கல்குறிச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட தொடக்க விழா நடந்தது. கலெக்டர் ஜெயசீலன் தலைமை வகித்தார். சீனிவாசன் எம்.எல்.ஏ., மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் திட்டத்தினை தொடங்கி வைத்தனர். பின்னர் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கூறுகையில், விருதுநகர் மாவட்டத்தில் முதல்கட்டமாக அருப்புக்கோட்டை, கல்குறிச்சியில் மொத்தம் 2050 பயனாளிகளுக்கு ரூ.1000 வழங்குவதற்கான பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மகளிர் இலவச பஸ், புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசுக்கு என்றும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றார். அமைச்சர் தங்கம் தென்னரசு பேசுகையில், குடும்பத்தை உயர்த்துவதற்கும், குழந்தைகள், கணவர்கள், குடும்ப உறுப்பினர்கள் என அனைவருக்காகவும் உழைக்கும் பெண்களுக்கு இந்தியாவிலேயே முதல் முதலாக அங்கீகாரம் கொடுத்தது தமிழக முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் தான் என்றார்.

# கொலை முயற்சி வழக்கில் மேலும் 2 பேர் கைது

மணிமங்கலம், செப். 17

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அடுத்த கரசங்கால் பகுதியை சேர்ந்தவர் சேகர் (வயது 47). ஆட்டோ டிரைவர். இவரை கடந்த மாதம் கரசங்கால் மருந்து கடை அருகே வைத்து கத்தியால் வெட்டி கொல்ல முயன்றனர். அதே போல் சமத்துவபுரம் அம்மன் கோவில் தெருவை சேர்ந்த விக்னேஷ் (26) என்பவரையும் கத்தியால் வெட்டி கொலை செய்ய முயன்றனர். கொலை முயற்சியில் ஈடுபட்டது. கரசங்கால் பகுதியை சேர்ந்த கோபி என்ற கோபிநாத் (35), சமத்துவபுரம் பகுதியை சேர்ந்த விக்கி என்ற விக்னேஷ் (29) என்பது தெரியவந்தது. அவர்கள் இருவரும் கரசங்கால் ஏரிக்கரையில் கஞ்சா விற்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. மணிமங்கலம் போலீஸ் உதவி கமிஷனர் ரவி தலைமையில் இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் மற்றும் போலீசார் அந்த பகுதிக்கு சென்று இருவரையும் மடக்கி பிடித்து அவர்களிடம் இருந்த 1½ கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். போலீஸ் விசாரணையில் கோபி மீது ஒரு கொலை, 8 கொலை முயற்சி, 7 அடிதடி வழக்குகள், கொள்ளையடித்தல் போன்ற வழக்குகள் மணிமங்கலம், சோமங்கலம், ஓட்டேரி, கானாத்தூர் போலீஸ் நிலையங்களில் உள்ளது தெரியவந்தது.. விக்னேஷ் மீது மணிமங்கலம், சோமங்கலம் போலீஸ் நிலையங்களில் கொலை முயற்சி, அடிதடி, கொள்ளையடித்தல், வெடி குண்டு வைத்து மிரட்டுதல் போன்ற வழக்குகள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து இருவரையும் போலீசார் கைது செய்தனர்.

# சாலையில் சுற்றி திரிந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு அபராதம்



வண்டலூர், செப். 17

செங்கல்பட்டு மாவட்டம் நெடுங்குன்றம் ஊராட்சிக்குட்பட்ட கொளப்பாக்கம் பகுதியில் சாலையில் ஏராளமான மாடுகள் சுற்றி திரிவதாக மாவட்ட கலெக்டருக்கு புகார் வந்தது. இதனை தொடர்ந்து மாவட்ட கலெக்டர் உத்தரவுபடி நேற்று நெடுங்குன்றம் ஊராட்சி மன்ற தலைவர் வனிதா ஸ்ரீ சீனிவாசன் தலைமையில் ஊராட்சி மன்ற ஊழியர்கள் கொளப்பாக்கம் பகுதியில் சுற்றி திரிந்த மாடுகளை பிடித்து மாட்டின் உரிமையாளர்களுக்கு தலா ரூ.2 ஆயிரம் அபராதம் விதித்தனர். இது குறித்து ஊராட்சி நிர்வாகம் கூறியதாவது: நெடுங்குன்றம் ஊராட்சிக்குட்பட்ட கொளப்பாக்கம், ஆலப்பாக்கம், நெடுங்குன்றம், சதானந்தபுரம், மப்பேடு பகுதிகளில் உள்ள வீடுகளில் மாடுகளை வளர்க்கும் மாட்டின் உரிமையாளர்கள் தங்களது மாடுகளை வீடுகளிலே கட்டி வளர்க்க வேண்டும். சாலை மற்றும் தெருக்களில் மாடுகள் சுற்றிதிரிந்தால் மாட்டின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். மேலும் மாடுகளை பிடித்து பட்டியில் அடைக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

# திருவெண்ணைநல்லூர் அருகே தாய்மகனை தாக்கிய வாலிபர் கைது

விழுப்புரம், செப். 17

திருவெண்ணைநல்லூர் அருகே தாய் மற்றும் மகனை தாக்கிய வாலிபர் கைது செய்யப்பட்டார். ஆத்திரமடைந்த ராஜா, இளவரசியை ஆபாசமாக திட்டி தாக்கியுள்ளார்.

திருவெண்ணைநல்லூர் அருகேயுள்ள பேரங்கியூர் குச்சிபாளையம் கிராமத்தை சேர்ந்தவர் அம்பிகாபதி மனைவி இளவரசி இவரது 10 வயது மகன் வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அதே ஊரைச் சேர்ந்த ராஜா (25), சிறுவனை அடித்து துன்புறுத்தியுள்ளார். இத்தகவல் அறிந்த இளவரசி, எதற்காக எனது மகனை அடித்தாய் என, ராஜாவிடம் கேட்டுள்ளார். ஆத்திரமடைந்த ராஜா, இளவரசியை ஆபாசமாக திட்டி தாக்கியுள்ளார். இது தொடர்பாக திருவெண்ணை நல்லூர் போலீசார் வழக்கு பதிவு செய்து, ராஜாவை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# மோட்டார் சைக்கிள் மீது பஸ் மோதி வாலிபர் பலி

அரியலூர், செப். 17

கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவர் உசேன்(வயது 26). இவர் வி.கைகாட்டியில் அரியலூர் சாலையில் இருசக்கர வாகனங்களின் இருக்கை கவர் விற்பனை செய்து வந்தார்.

இந்நிலையில் நேற்று மதியம் உசேன், டீ வாங்கிக்கொண்டு அரியலூர் சாலையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது திருச்சியில் இருந்து ஜெயங்கொண்டம் நோக்கி வந்த அரசு விரைவு பஸ், மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதில் பலத்த காயமடைந்த உசேனை அக்கம், பக்கத்தினர் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு உசேனை பரிசோதனை செய்த டாக்டர்கள், அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இது குறித்து விக்கிரமங்கலம் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தொழிலாளி கைது

வேலூர், செப். 17

வேலூர் அருகே உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் 13 வயது சிறுமி. இவர் வீட்டில் தனியாக இருந்தார்.

அப்போது, அங்கு வந்து அவரது உறவினரான புத்தூர் பகுதியை சேர்ந்த சிலை செய்யும் தொழிலாளி பிரபாகரன் (33) என்பவர் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

இதுகுறித்து மாணவி தனது பெற்றோரிடம் நடந்ததை கூறி அழுதுள்ளார்.

இது குறித்து சிறுமியின் பெற்றோர் வேலூர் அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்தனர்.

அதன் பேரில் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து, பிரபாகரனை கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

# மகளிர் நலன் காப்பதில் தமிழக அரசு முக்கிய பங்கு வகிக்கிறது: அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் பேச்சு




தருமபுரி, செப். 17

தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் காஞ்சிபுரம் மாவட்டத்தில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, தருமபுரி அரசு கலைக் கல்லூரி கலை அரங்கில் நடைபெற்ற விழாவில் தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குடும்பத் தலைவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இவ்விழாவிற்கு தருமபுரி மாவட்ட கலெக்டர்சாந்தி, தலைமை தாங்கி பேசினார். இவ்விழாவில் தமிழக வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கூறியதாவது: தமிழ்நாடு முதல்அமைச்சர் பெண்களின் முன்னேறத்திற்கென எண்ணற்ற திட்டங்களை அறிவித்து, அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார். மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளைநிலைநாட்டுவதில் எப்போதும் தமிழக அரசு அக்கறை செலுத்துவதாக அவர் தெரிவித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியில் அறிவித்தபடி, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கிடும் அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் அண்ணா பிறந்தநாளான நேற்று தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமாகவும், இந்தியாவிலேயேஎந்தமாநிலத்திலும் இல்லாத வகையில் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந் தோறும் ரூ.1000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து தற்போது தருமபுரி மாவட்டத்தில் இவ்விழாவின் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், தருமபுரி மற்றும் நல்லம் பள்ளி வருவாய் வட்டத்தை சார்ந்த 2000 மகளிருக்கு இன்றைய தினம் வங்கி பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 3,92,385 விண்ணப்பங்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பெற்று பரிசீலிக்கப்பட்டு, தற்போது குடும்பதலைவிகளுக்கு ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. கருணாநிதி மகளிருக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33% தனி இடஒதுக்கீட்டினை உருவாக்கி தந்தார்கள். அதன் தொடர்ச்சியாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மகளிர் நலன் காக்கும் வகையிலும், வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையிலும் மகளிர் கட்டணமில்லாமல் நகரபேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும் வண்ணம் பயணம் திட்டத்தையும், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந் தோறும் ரூ.1000 வழங்கும்புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை அறிவித்தார். தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமை முதன்முதலாக தொடங்கி வைத்தார். இதே போல் தருமபுரி மாவட்டத்தில் தான் டாக்டர் கலைஞரால் முதன் முதலில் 1989 ஆம் ஆண்டு ஏழை எளிய மகளிரைக் கொண்டு மகளிர் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்டது. தற்போது தருமபுரி மாவட்டத்தில் 14.105 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 1,69,254 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இம்மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடந்த ஆண்டு 21.048 மகளிர் பயனடையும் வகையில் ரூபாய் 116.96 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு வங்கிகள் மூலம் மகளிர் சுயஉதவிக்குழு கடனுதவிகள் வழங்கப்பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டு பேசினார். இவ்விழாவில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி.எஸ்.செந்தில் குமார், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உறுப்பினர் தடங்கம் சுப்பிரமணி, முன் னாள் அமைச்சர் பழனி யப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் பிரியா, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் கீதா ராணி, அரூர் வருவாய் கோட்டாட்சியர் வில்சன் ராஜசேகர், மாநில கைம்பெண் மற்றும் ஆதரவற்றோர் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மாது சண்முகம், தடங்கம் ஊராட்சி மன்றத் தலைவர் கவிதா உள்ளிட்ட உள் ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் மகளிர் உரிமைத் தொகை பெற்ற பயனாளிகள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கான திட்டங்கள் அதிகளவில் தீட்டப்படுகிறது




வேங்கிக்கால், செப். 17

திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதியில் உள்ள தச்சம்பட்டு கிராமத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்ட தொடக்க விழா நடந்தது. கலெக்டர் பா.முருகேஷ் தலைமை தாங்கினார். துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி முன்னிலை வகித்தார். சி.என். அண்ணாதுரை எம்பி, எம்.எல்.ஏக்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, அம்பேத்குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பார்வதி சீனிவாசன், ஒன்றியக்குழுத் தலைவர் கலைவாணி கலைமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு திட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பேசியதாவது: திருவண்ணாமலை மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைக்க எனக்கு அனுமதி அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். திமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் பெண்களுக்கான திட்டங்கள் அதிக அளவில் தீட்டப்படுகிறது. திமுகவையும், கருணாநிதியையும் உருவாக்கியவர் அண்ணா. உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை அளித்த கட்சி நீதிக் கட்சி. சொத்தில் பெண்களுக்கு சம பங்கு உண்டு என்ற ஆணை, விதவை பெண்களுக்கு அரசின் சார்பில் தையல் எந்திரம், காவல்துறையில் பெண்கள் பணியாற்ற ஆணை, தேர்தலில் 33 சதவிகித இட ஒதுக்கீடு ஆகியவற்றை வழங்கியவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி. பெண்களுக்காக கருணாநிதி திட்டங்களை தீட்டினார். தற்போதைய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 16 திட்டங்களை தீட்டி நடைமுறை படுத்தி வருகிறார். அரசு பள்ளி மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்ற புதுமைப்பெண் திட்டம், அரசு பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், குடும்ப தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் ஆகியவற்றை கொடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி இருக்கிறார். இது பெண்களுக்கான ஆட்சி. ஆயிரம் ரூபாயை எதிர்பார்த்திருக்கும் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் தகுதியான குடும்ப தலைவிகளுக்கு உரிமைத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

இதில் முன்னாள் எம்பி த.வேணுகோபால், மாநிலதடகளசங்கதுணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தொழிலாளர் நலன் மேம்பாட்டு அரசு பிரதிநிதி இரா.ஸ்ரீதரன், நகர மன்ற தலைவர் நிர்மலா வேல்மாறன், சீனியர் தடகள சங்க மாவட்ட தலைவர் ப.கார்த்திவேல்மாறன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் ரமணன், முன்னாள் எம்.எல்.ஏ எதிரொலிமணியன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் இல.சரவணன், தொழிலதிபர் பன்னீர்செல்வம், ஒப்பந்ததாரர்கள் துரை வெங்கட், ப்ரியா விஜயரங்கன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பிரியதர்ஷினி நன்றி கூறினார்.

# மணல் கடத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை அதிகாரிகள் எச்சரிக்கை

பொன்னேரி, செப். 17

இருசக்கர வாகனங்கள், லாரிகள், படகுகள் மூலம் எடுத்து செல்லுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுப் பணித்துறை, காவல்துறை, வனத்துறை, போக்கு வரத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொன்னேரியில் கனிமவளம் குறித்த ஆய்வு கூட்டம் பொன்னேரி சப்கலெக்டர் ஐஸ்வர்யா தலைமையில் தாசில்தார் மதியழகன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் அனுமதிக்கப்படாமல் இரவு நேரங்களில் சவுடு மண் மற்றும் ஆற்று மணல், கடல் மணல் ஆகிய கனிம வளங்களை இருசக்கர வாகனங்கள், லாரிகள், படகுகள் மூலம் எடுத்து செல்லுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விசயத்தில் காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொன்னேரி தாசில்தார் மதியழகன் தெரிவித்தார். அதன் பின் திருவிழாக்கள் மற்றும் இறுதி ஊர்வலம் நடைபெறும் போது வாகன ஓட்டிகளுக்கு பொதுமக்களுக்கு எந்த ஒரு இடையூறும் இல்லாமல் பட்டாசு வெடிக்க வேண்டும் என பொது மக்களுக்கு அரசு அதிகாரிகள் அறிவுரை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. கூட்டத்தில் துணை தாசில்தார் செந்தில், வருவாய் துறை, பொதுப் பணித்துறை, காவல் துறை, வனத்துறை, போக்கு வரத்துதுறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கோவையில் விநாயகர் சிலைகளை கரைக்க 16 இடங்கள் தேர்வு

கோவை, செப். 17

விநாயகர் சதுர்த்தி விழா நாளை மறுநாள் (18ந் தேதி) கொண்டாடப்படுகிறது. விநாயகர் சிலைகளை மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு விசர்ஜனம் செய்ய வேண்டும்.

விநாயகர் சதுர்த்தி விழா நாளை (18ந் தேதி) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி பிரதிஷ்டை செய்யப்படும் விநாயகர் சிலைகளை கரைக்க 16 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இதுகுறித்து கோவை மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: கோவையில் விநாயகர் சிலைகளை வைக்க உரிய அதிகாரிகளிடம் முன்அனுமதி பெறவேண்டும். அதன்பிறகு தான் சம்பந்தப்பட்ட இடங்களில் சிலைகளைவைக்கவேண்டும். சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை கொண்டு உருவாக்கப்படும் விநாயகர் சிலைகளை கரைப்பதற்காக, கோவையில் 16 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. அதன்படி முத்தண்ணன்குளம், பவானி ஆறு (சிறுமுகை, எலகம்பாளையம், மேட்டுப்பாளையம் சுப்ரமணியர் கோவில் மற்றும் தேக்கம்பட்டி), அம்பராம்பாளையம் ஆறு, நொய்யல் ஆறு, உப்பாறு, நடுமலை ஆறு, ஆனைமலை முக்கோணம் ஆறு, சிறுமுகை பழத்தோட்டம், சாடிவயல், வாளையார் அணை, ஆழியாறு ஆத்துப்பாறை, குறிச்சிகுளம், குனியமுத்தூர் குளம், சிங்காநல்லூர் குளத்தேரி, வெள்ளக்கிணறு குளம் மற்றும் நாகராஜபுரம் குளம் ஆகிய பகுதிகளில் விநாயகர் சிலைகளை மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின்விதிமுறைகளுக்கு உட்பட்டு விசர்ஜனம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.



## ராதிகா சரத்குமாரை சந்தித்த தனுஷ்.. ஏன் தெரியுமா?

தனுஷ்தற்போதுஅருண்மாதேஸ்வரன்இயக்கத்தில் 'கேப்டன் மில்லர்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் இறுதிக் கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இப்படம் டிசம்பர் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து தனுஷ் 50வது படத்தை அவரே இயக்கி நடிக்கிறார். சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நடிகர் தனுஷ், நடிகை ராதிகா மற்றும் சரத்குமாரை சந்தித்துள்ளார். அதாவது, ராதிகா சரத்குமார் தம்பதியின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சியில் தனுஷ் கலந்து கொண்டுள்ளார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.



## ரூ.15 கோடி போச்சே.. பாட்டு லீக் ஆனதால் அப்செட் ஆன ஷங்கர்

தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குனரான ஷங்கர் இயக்கத்தில்உருவாகிவரும்திரைப்படம்'கேம்சேஞ்சர்'. ராம் சரண் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் கியாரா அத்வானி கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், எஸ்.ஜே.சூர்யா, அஞ்சலி, ஸ்ரீகாந்த், சமுத்திரக்கனி, உட்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் சார்பில் தில் ராஜு தயாரிக்கும் இப்படத்திற்கு தமன் இசையமைக்கிறார். இப்படத்தின் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்தப் படத்தின் பாடல் காட்சிகளுக்காக மட்டும் ரூ.90 கோடி செலவழிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. லீக்கான பாடல் இந்நிலையில், 'கேம் சேஞ்சர்'திரைப்படத்தில்இடம்பெற்றுள்ள'ஜாபிலம்மா' என்ற பாடல் ரிலீஸாகுவதற்கு முன்பே சமூக வலைதளத்தில் லீக்காகியுள்ளது. ரூ.15 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இந்த பாடல் லீக்கானதால் படக்குழு அதிர்ச்சியில் உள்ளது. மேலும், இந்த பாடலை சமூக வலைதளத்தில் இருந்து நீக்கும் பணியில் படக்குழு ஈடுபட்டுள்ளது.

## வாய்ஸ்கே இப்படினா.. படம் ரிலீஸானா.. ரசிகர்களை கவரும் ஜப்பான்



இயக்குனர் ராஜு முருகன் இயக்கத்தில் நடிகர் கார்த்தி கதாநாயகனாக நடித்து வரும் திரைப்படம் 'ஜப்பான்'. இதில் கதாநாயகியாக 'துப்பறிவாளன்', 'நம்மவீட்டு பிள்ளை' போன்ற படங்களில் நடித்த அனு இமானுவேல் நடிக்கிறார். இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ்இசையமைக்கட்ரீம்வாரியர்பிக்சர்ஸ்தயாரிக்கிறது. இப்படத்தின் போஸ்டர் மற்றும் டீசர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. 'ஜப்பான்' படத்தின் டப்பிங் பணிகள் தொடங்கியுள்ளதாக படக்குழு சமீபத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டு அறிவித்திருந்தது. இந்நிலையில், இந்த வீடியோ 6 மில்லியன் பார்வையாளர்களை கடந்துள்ளது. இதனை தயாரிப்பு நிறுவனம்அதிகாரப்பூர்வமாகஅறிவித்துள்ளது.இதற்கு'வாய்ஸ்கே இப்படினா.. படம் ரிலீஸானா' என்று ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகின்றனர்.

## 40 ஆண்டுகளாகியும் பொருள் புரியாமல் புகார் வருகிறது வைரமுத்து




முன்னணி இயக்குனரான பாரதிராஜா இயக்கத்தில் கடந்த 1983ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் 'மண்வாசனை'. இந்த படத்தில் பாண்டியன், ரேவதி, வினு சக்ரவர்த்தி, காந்திமதி, விஜயன் என பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர். இளையராஜா இசையமைத்திருந்த இந்த படத்திற்கு வைரமுத்து பாடல் வரிகள் எழுதியுள்ளார். இந்த படத்தில் இடம்பெற்றிருந்த 'பொத்தி வச்ச மல்லிக மொட்டு' பாடல் 80 காலக்கட்டங்களில் மிகவும் வரவேற்பை பெற்ற பாடலாக அமைந்தது.

அதுமட்டுமல்லாமல் இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இதையடுத்து 'மண்வாசனை' திரைப்படம் வெளியாகி 40 ஆண்டுகளை கடந்துள்ளது.

இந்நிலையில், 'பொத்தி வச்ச மல்லிக மொட்டு' பாடலின் பொருள் புரியாமல் இன்னும் புகார் வருகிறது என்று வைரமுத்து கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "இன்றுடன் நாற்பது ஆண்டுகள் பாரதிராஜாவின் மண்வாசனை வெளிவந்து "ஆத்துக்குள்ள நேத்து ஒன்ன நெனச்சேன் வெக்கநெறம் போக மஞ்சக் குளிச்சேன்" என்ற வரியின் பொருள் புரியாமல் இன்னும் புகார் வருகிறது "என் வெட்கத்தின் சிவப்பு நிறம் பார்த்து அது ஆசையின் அழைப்பென்று கருதி என் முரட்டு மாமன் திருட்டு வேலை செய்துவிடக்கூடாது அதனால் மஞ்சள் பூசி என் வெட்கத்தை மறைக்கிறேன்" என்பது விளக்கம் இந்தநாற்பது ஆண்டுகளில் காதலின் விழுமியம் மாறியிருக்கிறது வெட்கப்பட ஆளுமில்லை மஞ்சளுக்கும் வேலையில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.





## ஒவ்வொரு டிக்கெட்டிலிருந்தும் ஒரு ரூபாயை விவசாயிகளுக்கு கொடுப்பேன் விஷால்

இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் விஷால் நடித்துள்ள திரைப்படம் 'மார்க் ஆண்டனி'. இப்படத்தின் நாயகியாக ரித்து வர்மா நடித்துள்ளார். மேலும் எஸ்.ஜே.சூர்யா மற்றும் செல்வராகவன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படம் நேற்று (செப்டம்பர் 15) திரையரங்குகளில் வெளியானது. மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இப்படம் வெளியாகியுள்ளதால் ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில், ரசிகர்கள்இப்படத்திற்கு அளித்த வரவேற்பைத் தொடர்ந்து நடிகர் விஷால் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "மார்க் ஆண்டனிதிரைப்படம்பிளாக்பஸ்டர்என்றவார்த்தை கேட்கும் போதும் அனைவரும் பாராட்டும் போதும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. ரசிகர்கள் கொடுத்த காசிற்கு ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். தமிழ்நாடு மக்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றரை வருட உழைப்பிற்கு பலன் கிடைத்தது போல இருக்கு. நான் முன்பேகூறியிருந்தது போல என்படத்தின் ஒவ்வொரு டிக்கெட்டிலிருந்தும் ஒரு ரூபாயை விவசாயிகளுக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன்" என்று கூறினார்.

## இரண்டுல ஒன்னு பாத்தர்லாம்.. பிக்பாஸ் வெளியீட்டு தேதி அறிவிப்பு

தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மிகவும் பிரபல மானது பிக்பாஸ். இந்த நிகழ்ச்சியில் இதுவரை ஆறு சீசன்கள் முடிவடைந்துள்ளதை அடுத்து விரைவில் ஏழாவது சீசன் தொடங்கப்படவுள்ளது. பிக்பாஸ் நிகழ்ச்சியின் முதல் சீசனில் ஆரவ் டைட்டிலை தட்டி சென்றார். இதனை தொடர்ந்து இரண்டாவது சீசனில் ரித்விகாவும், மூன்றாவது சீசனில் முகின் ராவும், நான் காவது சீசனில் ஆரியும், ஐந்தாவது சீசனில் ராஜுவும், ஆறாவது சீசனில் அசீமும் டைட்டிலை கைப்பற்றி னர். இந்த நிகழ்ச்சியின் ஆறு சீசன்களையும் நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கியதையடுத்து ஏழா வது சீசனையும் அவரே தொகுத்து வழங்கவுள்ளார். இந்நிலையில், பிக்பாஸ் 7வது சீசன் வெளியீட்டு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த நிகழ்ச்சி வருகிற அக்டோபர் 1 முதல் விஜய் டிவியில் மாலை 6 மணிக்கு ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது. இதனை புரோமோ வீடியோ ஒன்றை வெளியிட்டு அறிவித்துள் ளது. இந்த வீடியோவில் நடிகர் கமல்ஹாசன் 'இரண் டுல ஒன்னு பாத்தர்லாம்' என்று கூறியிருப்பார். இந்த வீடியோவை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.

## பிஎஸ்ஜி அணிக்கு அதிர்ச்சி அளித்த நைஸ்: எம்பாப்வே 2 கோல் அடித்தும் பலனில்லை



பிரான்ஸ் நாட்டில் நடைபெறும் முன்னணி கால்பந்து தொடர் லீக்1. இதில் முன்னணி அணியாக பிஎஸ்ஜி திகழ்ந்து வருகிறது. இந்த அணியில் இருந்து மெஸ்சி, நெய்மர் ஆகியோர் வெளியேறிவிட்டனர். நட்சத்திர வீரர் எம்பாப்வே அந்த அணிக்காக விளையாடி வருகிறார். இந்திய நேரப்படி இன்று காலை பிஎஸ்ஜி அணி நைஸ் அணியை எதிர்கொண்டது. இதில் எம்பாப்பே இரண்டு கோல்கள் அடித்த போதிலும், 23 என நைஸ் அணியிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தது. ஆட்டம் தொடங்கிய 21வது நிமிடத்தில் நைஸ் அணியின் டெரெம் மொஃப்பி கோல் அடித்தார். இதற்கு எம்பாப்வே 29வது நிமிடத்தில் பதில் கோல் அடித்தார். இதனால் முதல் பாதி நேர ஆட்டத்தில் இரு அணிகளும் 11 சமனில் இருந்தது. 2வது பாதி நேரத்தில் நைஸ் வீரர்கள் அபாரமாக விளையாடினர். 53வது நிமிடத்தில் கயேடன் லபோர்டேவும், 68வது நிமிடத்தில் மொஃப்பியும் கோல் அடித்தனர். இதனால் நைஸ் 31 என முன்னிலைப் பெற்றது. அதன்பின் பிஎஸ்ஜி அணியால் கோல் அடிக்க முயற்சித்தது. ஆட்டத்தின் 87வது நிமிடத்தில் எம்பாப்பே மீண்டும் ஒரு கோல் அடித்தார். ஆனால், அதன்பின் பிஎஸ்ஜி அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இதன்காரணமாக பிஎஸ்ஜி 23 எனத் தோல்வியை சந்தித்தது. இந்தத் தோல்வியால் பிஎஸ்ஜி புள்ளிகள் பட்டியலில் 3வது இடத்திற்கு சரிந்துள்ளது. மொனாக்கோ முதல் இடத்திலும், நைஸ் 2வது இடத்திலும் உள்ளது.



## அதிக முறை 400 ரன்கள்: இந்தியாவின் சாதனையை முறியடித்த தென் ஆப்பிரிக்கா

தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 4வது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வுசெய்தது. அதன்படி, முதலில் ஆடிய தென் ஆப்பிரிக்கா 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 416 ரன்கள் குவித்தது. ஹென்றிச் கிளாசென் 83 பந்துகளில் 13 பவுண்டரி, 13 சிக்சர் உள்பட 174 ரன்கள் அடித்து ஆட்டமிழந்தார். டேவிட் மில்லர் 45 பந்துகளில் 6 பவுண்டரி, 5 சிக்சர் உள்பட 82 ரன்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். வான்டெர் டுசன் அரை சதமடித்து 62 ரன்னில் அவுட்டானார். 5வது விக்கெட்டுக்கு கிளாசன், மில்லர் ஜோடி 94 பந்துகளில் 222 ரன்கள் குவித்து அசத்தியது. இந்நிலையில், தென் ஆப்பிரிக்கா அணி ஒருநாள் போட்டிகளில் 7வது முறையாக 400 ரன்களை கடந்து புதிய சாதனை படைத்துள்ளது. மேலும், அதிக முறை 400 ரன்கள் எடுத்த பட்டியலில் இந்தியாவின் சாதனையை தென் ஆப்பிரிக்கா முறியடித்தது.

## 4வது ஒருநாள் போட்டியிலும் வெற்றி: நியூசிலாந்துக்கு எதிரான தொடரை கைப்பற்றியது இங்கிலாந்து




நியூசிலாந்து கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் பங்கேற்று விளையாடியது. முதல் 3 ஆட்டங்களில் இங்கிலாந்து அணி 2 வெற்றிகளும் நியூசிலாந்து 1 வெற்றியும் பெற்றிருந்தன. இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 4வது மற்றும் கடைசி ஒருநாள் ஆட்டம் லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடந்தது. டாஸ் வென்ற இங்கிலாந்து பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 311 ரன்கள் சேர்த்தது. டேவிட் மலான் சிறப்பாக ஆடி சதம் விளாசினார். அவர் 127 ரன்களில் அவுட்டானார். ஜோஸ் பட்லர் 36 ரன்னும், ஜோ ரூட் 29 ரன்னும், ஜோ ரூட் 29 ரன்னும், லிவிங்ஸ்டோன் 28 ரன்னும் எடுத்தனர். நியூசிலாந்து சார்பில் ரச்சின் ரவிச்சந்திரா 4 விக்கெட்டும், டேரில் மிட்செல், மேட் ஹென்றி தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதையடுத்து, 312 என்ற இலக்கை நோக்கி நியூசிலாந்து அணி களமிறங்கியது. அந்த அணியின் ரச்சின் ரவிச்சந்திரா சற்று நிலைத்து நின்று ஆடி அரைசதம் கடந்தார். அவர் 61 ரன்னிலும், ஹென்றி நிக்கோல்ஸ் 41 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இறுதியில், நியூசிலாந்து அணி 38.2 ஓவரில் 211 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் இங்கிலாந்து அணி 100 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை 31 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியது. ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது டேவிட் மலானுக்கு வழங்கப்பட்டது. ஏற்கனவே நடந்து முடிந்த டி20 தொடர் 22 என சமனில் முடிந்தது நினைவிருக்கலாம்.



## கிளாசனின் கிளாசிக்கான ஆட்டம் 164 ரன்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா அபார வெற்றி

தென் ஆப்பிரிக்கா சென்றுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. முதல் இரு போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்தது. 3வது ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா 111 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 4வது ஒருநாள் போட்டி இன்று நடைபெற்றது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வுசெய்தது. அதன்படி, முதலில் ஆடிய தென் ஆப்பிரிக்கா தொடக்கத்தில் நிதானமாக ஆடியது. வான்டெர் டுசன் அரை சதமடித்து 62 ரன்னில் அவுட்டானார். அப்போது 34.4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 194 ரன்கள் எடுத்திருந்தது. ஒருபுறம் ஹென்ரிச் கிளாசென் அதிரடியாக ஆடி பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்க விட்ட அவர் ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்தார். அதன்பின், ஹென்ரிச் கிளாசனுடன் டேவிட் மில்லர் ஜோடி சேர்ந்தார். இருவரும் ரன்களை குவித்தனர். தொடர்ந்து சிக்ஸர் மழை பொழிந்த கிளாசென் சதம் கடந்து அசத்தினார். மறுபுறம் மில்லர் அதிரடி காட்டி அரைசதம் அடித்தார். 5வது விக்கெட்டுக்கு கிளாசன், மில்லர் ஜோடி 94 பந்துகளில் 222 ரன்கள் குவித்து அசத்தியது. இறுதியில், தென் ஆப்பிரிக்கா அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 416 ரன்கள் குவித்தது. கிளாசென் 83 பந்துகளில் 13 பவுண்டரி, 13 சிக்சர் உள்பட 174 ரன்கள் அடித்து ஆட்டமிழந்தார். டேவிட் மில்லர் 45 பந்துகளில் 6 பவுண்டரி, 5 சிக்சர் உள்பட 82 ரன்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து, 417 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. அந்த அணியின் விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி மட்டும் பொறுப்புடன் ஆடினார். சதமடிப்பார் என எதிர்பார்த்த நிலையில் 99 ரன்னில் அவுட்டானார். டிம் டேவிட் 35 ரன்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில் ஆஸ்திரேலிய அணி 34.5 ஓவரில் 252 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் தென் ஆப்பிரிக்க அணி 164 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஒருநாள் தொடர் 22 என சமனிலை வகிக்கிறது. தென் ஆப்பிரிக்க சார்பில் நிகிடி 4 விக்கெட்டும், ரபாடா 3 விக்கெட்டும் கைப்பற்றினர். ஆட்ட நாயகன் விருது கிளாசனுக்கு வழங்கப்பட்டது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் 5வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ஜோகனஸ்பெர்கில் நாளை நடைபெறுகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.